## கண்டனக் குரல்!




**சா**தி, மதம், இனம், மொழி, நிறம், உணவுப் பழக்கவழக்கம் என எதன் பேரிலும் காட்டப்படும் பாகுபாடு என்பது கண்டிக்கத்தக்கதே. ஒருவர் சைவ உணவுப்பழக்கம் உள்ளவராகவோ அசைவம் சாப்பிடுபவராகவோ இருக்கலாம். ஆனால், இந்தப் பழக்கம்தான் உயர்வானது, புனிதமானது என்று சொல்லும்போதுதான் பிரச்சினை வருகிறது. அப்படியானதொரு எதிர்ப்பைத்தான் ஜொமாட்டோ உணவு வினியோக நிறுவனமும் சமீபத்தில் சந்தித்தது.

‘சைவ உணவுகளை விநியோகிப்பதற்கு என்றே ஒரு பச்சைப்பெட்டியை அறிமுகம் செய்கிறோம். அந்த பச்சைப்பெட்டியில் சுத்த சைவ உணவகங்களின் உணவு மட்டும்தான் இருக்கும். அசைவ உணவுகள் மட்டுமல்ல, அசைவ உணவகங்களில் விற்கப்படும் சைவ உணவுகளும் இருக்காது’ என்று அறிவித்த ஜொமாட்டா நிறுவனம், அந்த ‘சுத்த சைவ’ ஊழியர்களுக்கும் பச்சைநிற சீருடையை அறிமுகம் செய்தது. ஆனால், இப்படி விநியோகிக்கும் ஊழியர்களைப் பாகுபடுத்தக்கூடாது என்று எதிர்ப்புகள் எழுந்ததையடுத்து, ‘எல்லா ஊழியர்களுக்கும் ஒரேமாதிரியான வழக்கமான சீருடைதான்’ என்று அறிவித்திருக்கிறது ஜொமாட்டா. ‘சைவ உணவுகளுக்கு என்றே தனிப்பெட்டி என்ற அறிவிப்பு திரும்பப் பெறப்படாவிட்டாலும் சீருடைப் பாகுபாடு திரும்பப் பெறப்பட்டது எங்களுக்குக் கிடைத்த வெற்றி’ என்கிறார்கள், கண்டனக் குரல் எழுப்பியவர்கள்.

## ஃப்ளாஷ்பேக்


ஹாஜா ஜலீலுதீன்



### இஃப்தாரில் மேயர் தளபதி!

1999-ஆம் ஆண்டு, சென்னை மாநகரத் தந்தையாக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் திகழ்ந்தார். அந்த ஆண்டு, மண்ணடி தம்புச்செட்டி தெருவில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் தளபதி அவர்கள் பங்கேற்று, எங்களுடன் நோன்பு திறந்தார். அவருக்கு மரியாதை செய்யும் வகையில், சால்வை அணிவித்து அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

**–ஹாஜா ஜலீலுதீன், அவைத் தலைவர், துறைமுகம் பகுதி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எழுச்சி உரை!

1971-ஆம் ஆண்டு, ஓராண்டுக்கு முன்னதாகவே மக்களவையைக் கலைத்துத் தேர்தலை நடத்த ஒன்றிய அரசு முடிவு செய்தது. அப்போது, தமிழ்நாட்டு மக்களிடம் வானொலி மூலம் உரையாற்றினார் கலைஞர். “மக்கள் தங்களுக்காகவும், தங்கள் சந்ததிக்காகவும் வருங்காலத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வன்முறையற்ற வகையில், வறுமையை ஒழிக்கப் போராடவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற கோடிக் கணக்கான உழைக்கும் பாட்டாளிகளுக்கு இது அருமையான வாய்ப்பு. நான் மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மகத்தான நம்பிக்கை வைத்திருப்பவன்” என அவர் ஆற்றிய உரை மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது.

## சீரணி → இளைஞர் அணி

3

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...


ஓவியம் : ரவி பேலட்

# செயலாளர்கள் மன்றம்!

‘**செ**யல்... அதுவே சிறந்த சொல்’ என்பார்கள். பேரறிஞர் அண்ணா அதை தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால்தான் 1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்ததும், அடுத்து வந்த மே 8-அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர் இப்படிச் சொன்னார்:

“நாம் சிந்தித்து, சிந்தித்து ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். இனி, நாம் சிந்தித்துப் பயன் இல்லை. அதில் பொருத்தமும் இல்லை. மன்றத்தின் பெயர் ‘சிந்தனையாளர் மன்றம்’ என்று இருக்கட்டும். உங்கள் நடவடிக்கைகள் செயலாளர்கள் மன்றமாக அமைய வேண்டும்”.

அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசும்போது, “நாம் எதை, எதை நிறைவேற்றக் கருதுகிறோமோ அதற்கு அரசாங்கத்திடம் போதுமான நிதி இல்லை. ஆட்சியின் மூலமாக செய்யும் காரியங்கள் அல்லாமல் உங்களைப் போன்றவர்களைக் கொண்டு என்ன என்ன பணிகளைச் செய்ய முடியும் என்று யோசித்து வருகிறேன். இதில் எனக்கு திட்டமான வடிவம் புலப்படவில்லை. உங்களைப் போன்றவர்களை, மாணவ மாணவிகளைப் பொதுப் பணியில் ஈடுபட விரும்புகிறவர்களை எப்படிப் பயன்படுத்துவது? எதிலே ஈடுபடுத்துவது என்று யோசித்து வருகிறேன்” என்றவர், கிராமத்தில் இருப்பவர்களுக்கும், நகரத்தில் இருப்பவர்களுக்கும் எப்படிப்பட்ட வேலைகளைத் தரலாம் என்றும் அவர் திட்டமிட்டார்.

> **‘அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் – அசகாயச் சூரர்’ என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்!”**

அவர் சொல்கிறார்: “இது சென்னை நகரமாக இல்லாமல் கிராமமாக இருந்தால் உங்களை எல்லாம் உணவு உற்பத்தியில் ஈடுபடும்படி சொல்வேன். உங்களை, நகரில் உள்ளவர்களை அப்படிப்பட்ட பணிகளுக்கு நான் போகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட இடங்களுக்குப் போய் வரவே ஒருநாள் ஆகிவிடும். வாரத்தில் ஒரு நாள் அல்லது தினமும் ஒரு மணி நேரம் உங்கள் நேரத்தை நீங்கள் செலவிட்டால் அது கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சமமாகும்”.

கிராமமாக இருந்தால், இலங்கையில் அன்று இருந்தது போல பெரிய பெரிய அரசாங்க விவசாயப் பண்ணைகளில், ஊதியம் வாங்காத தொண்டாக, பள்ளி மாணவ மாணவிகளை அழைத்துச் சென்று நீர் பாய்ச்சுவது, களை எடுப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தலாம் என்றும், நகரமாக இருந்தால் அரசு நடத்தி வந்த கோழிப் பண்ணைகளில் சேவையாற்ற வைத்து, அங்கு ஏற்படும் நட்டத்தைக் குறைக்கலாம் என்றும் அண்ணா யோசித்தார்.

உணவு உற்பத்தி, குடும்பக் கட்டுப்பாடு, கலப்பட ஆபத்து, சுத்தமாக வாழும் முறை, இப்படிப்பட்ட பிரச்சினைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தத் திட்டமிட்ட அவர், “நாமாகப் பார்த்து ஒரு ஆட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். இப்படிப்பட்ட ஆட்சியை அமைக்க, நீங்கள்தான் துடித்தீர்கள்.

நான் வேண்டாம், வேண்டாம் என்றேன். நீங்கள் வேண்டும், வேண்டும் என்றீர்கள். இப்போது பொறுப்பை என்னிடம் தந்துவிட்டு, ‘அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் - அசகாயச் சூரர்’ என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்” என்றார்.

அன்று அண்ணாவின் அந்த உரைக்குப் பிறகு சிந்தனையாளர்கள், செயல் வீரர்களானார்கள்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

3

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”




# கரிகாலச் சோழன் ஆட்சி!

***கா**மராஜர் ஆட்சி காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் அணைகளே கட்டப்படவில்லையாமே, 19 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த கலைஞர் எந்த அணையையும் கட்டவில்லையா?*

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி செய்தபோது, இந்தியாவின் பிரதமராக இருந்த நேருவின் ஐந்தாண்டு திட்டங்கள் வாயிலாக, வடமாநிலங்களில் ஹிராகுட், பக்ராநங்கல் போன்ற அணைகள் கட்டப்பட்டன. ‘வடக்கு வாழ்கிறது-தெற்கு தேய்கிறது’ என்ற தி.மு.க. உரிமைக்குரலின் காரணமாக நேருவை வலியுறுத்திய காமராஜர் தமிழ்நாட்டில் வைகை, சாத்தனூர், ஆழியாறு உள்ளிட்ட பெரிய அணைகளைக் கட்டினார்.

தி.மு.க ஆட்சி அமைந்தபோது ஐந்தாண்டு திட்டங்கள் இல்லை. ஆறுகளின் குறுக்கே பெரிய அணைகள் கட்டுவதற்கு இயற்கை ஆர்வலர்களும் பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். இந்த நிலையில், இயற்கை வளத்தைக் கருத்திற்கொண்டும், நீர்ப்பாசனத் தேவை கருதியும், மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து தமிழ்நாட்டில் பல அணைகளையும் தடுப்பணைகளையும் கலைஞர் தனது ஆட்சியில் கட்டியுள்ளார்.

1967-ஆம் ஆண்டில் தொடங்கி 2011-ஆம் ஆண்டு வரை 5 முறை தி.மு.க ஆட்சி செய்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 42 அணைகள் கட்டப்பட்டுள்ளன. எந்தெந்த இடங்கள் என்று தி.மு.க பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பல முறை பட்டியலிட்டிருக்கிறார். (பார்க்க பெட்டிச் செய்தி)

(1) தும்பலஹள்ளி (2) சின்னாறு (3) குண்டேரிப் பள்ளம் (4) வறட்டுப்பள்ளம் (5) பாலாறு (6) பொருந்தலாறு (7) வரதமா நதி (8) வட்டமலைக்கரை ஓடை (9) பரப்பலாறு (10) பொன்னியாறு (11) மருதா நதி (12) பிளவுக்கல் (பெரியாறு) (13) கடானா (14) ராமாநதி (15) கருப்பா நதி (16) சித்தாறு-1 (17) சித்தாறு-2 (18) மேல் நீராறு (19) கீழ் நீராறு (20) பெருவாரிப்பள்ளம் (21) மோர்தானா (22) ராஜாதோப்பு (23) ஆண்டியப்பனூர் ஓடை (24) குப்பநத்தம் (25) மிருகண்டா நதி (26) செண்பகத்தோப்பு (27) புத்தன் (28) மாம்பழத்துறையாறு (29) பொய்கை (30) நல்லாறு (31) வடக்குப் பச்சையாறு (32) கொடுமுடி (33) அடவிநயினார் (34) சாஸ்தா கோவில் (35) இருக்கன்குடி (36) சென்னம்பட்டி (37) கிருதமால் (38) நல்லதங்காள் ஓடை (39) நங்காஞ்சியார் (40) வரட்டாறு வள்ளி மதுரை (41) பச்சை மலை (42) ஆனைவிழுந்தான் ஓடை

இந்த அணைகள் பலவும் தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்டவை. ஒரு சில அ.தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை. மேலும் சில தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை.


காமராஜர் ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாட்டில் அணையே கட்டப்படவில்லை என்று கண்மூடித்தனமாகப் பேசுபவர்கள் இந்த இடங்களுக்குச் சென்று கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொள்ளலாம். அண்டை மாநிலங்களை தண்ணீர் தேவைக்கு நம்பியிருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டின் இயற்கையமைப்பும் மாநில எல்லைகளும் அமைந்துவிட்டன. இந்த நிலையிலும் நீர் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு பல அணைகளைக் கட்டிய நவீன கரிகாலச் சோழன் நம் கலைஞர்.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

425

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.